திராவிடநாடு

25—12—60 | வார வெளியீடு | விலை 16 காசு

பகை ஒழிக்கக் கிளம்பிடுவீர்!

—[அசோகன்]—

முத்தளிக்கும் கடல்தாண்டி ஆட்சிசெய்த
மூவரசர் ஆண்டுவந்த தமிழ்க்குலமே!
எத்திசையும் புகழ்மணக்க நாகரிகம்
எழில்விளங்கப் படைத்தளித்த எம்குலமே
மெத்தமுந்தி வடபுலத்தார் தம்மறிவால்
புத்தமிழ்த நற்றமிழைப் புதைத்தழிக்க
வித்திட்டார் எனவறிந்து வீறுகொண்டு
வண்டமிழைக் காத்திடவே கிளம்பிடுவீர்!

பனிவரையில் பைந்தமிழர் கொடிபொறித்தும்
பகையரசர் முடித்தலையில் கல்லேற்றிக்
கனிமொழியைத் தமிழரசர் காத்துவந்தார்!
காதகர்கள் அழிக்கின்றார் அம்மொழியை
இனிவிடுத்தால் ஏளனமே செய்வாரந்தோ!
இவ்வுலகில் ஆண்மையுள்ளோர் எழுந்துயர்ந்த
தனிக்குலமாம் தமிழ்க்குலத்தின் புகழ்குலைத்த
தருக்கர்களின் பகைஒழிக்கக் கிளம்பிடுவீர்!

உலுத்தர்களை விட்டுவிட்டால் நப்புகழை
ஒழித்திடுவார் என்பதனை உணர்ந்துடனே
குலைத்திடுவோம் கொடுமைதனைக் கூர்மதியாலே
செம்மைதிகழ் வாழ்வதனை வளமாகவே
வலுப்பெறவே உயிர்ப்பொருளை வழங்கியேநாம்
வன்னெஞ்சர் வஞ்சமதை எதிர்த்துவெற்றிக்
களிப்புறவே உறுதிகொண்டு திராவிடத்தின்
கனியமுதத் தமிழ்பணிந்து கிளம்பிடுவீர்!

சி. என். ஏ.

"மணி! உனக்குச் சரியாப்புரியுதா? வீண் கௌரவத்துக்கு ஆசைப்பட்டு, பட்டுவோட உடம்புக்குக் கெடுதல் ஏற்படும்படி செய்துவிடாதேம்மா. மயக்கம் ஏன் ஏற்பட்டுது—எப்படி அதுவரவிடாமல் தடுக்கறது என்பதுபற்றி, வேண்டுமானா, நீயே, யாராவது பெரிய டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போயாவது காட்டு. நான்தான் டாக்டராச்சே, எனக்குத் தெரியாதா என்று, எதையோ கலக்கிக் கொடுத்துவிடாதே"

"பட்டு விஷயமா, எனக்கு அக்கரை இருக்காதுன்னு நினைக்கறிங்களே, அதுவே தவறு. டாக்டர்களைப்பற்றியும் நீங்க சரியாகப் புரிந்துகொள்ளணும். தங்களுடைய வறட்டுக் கௌரவத்தை டாக்டர்கள் எப்போதுமே, கவனிக்கக் கூடாது — கவனிக்கமாட்டார்கள். நோயின் தன்மை சரியாகப் புரியவில்லையானா, பெரிய டாக்டரிடம் அழைத்துக்கொண்டுபோய் காட்டுவதிலே, இழிவோ, குற்றமோ இல்லையாது"

"ஆமாம், மனோன்மணி! சிலர், என்னிடம் இல்லாத மருந்து, வேறுயாரிடம் இருக்கும்; எனக்குப் புரியல்லேன்னா, வேறுயாருக்குத் தான் புரியப்போகுது என்று பேசி ...."

"அப்படிப்பட்டவர்கள், புனிதமான மருத்துவத்துறையிலே இருக்கவே இலாயக்கில்லாதவர்கள். பணத்தாசைக்காக, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பதாக எண்ணினால், பெரிய கேடு, சமுகத்துக்கே ஏற்படும். டாக்டர் படிப்பு முடிந்தானதும், நாங்க, சபதம் செய்துவிட்டுத்தான், புனிதத் தொண்டு செய்ய ஆரம்பிக்கிறோம்"

"சொன்னேன்னு, கோபித்துக் கொள்ளாதே, மணி! சரி! மயக்கம், எதனாலே ஏற்பட்டது?"

"நரம்புகளிலே, சிலசமயத்திலே தளர்ச்சியோ, அல்லது அதிகமான முறுக்கோ ஏற்பட்டுவிடும். அதனாலே வருவதுதான், இந்த மயக்கம்"

"காத்து சேஷ்டை'ன்னு பெரியவா, சொல்லுவா..."

"நல்லவேளே, பொன்னி, இல்லே! இருந்திருந்தா...?"

"இருந்திருந்தா, பேயைக் கண்டது யாரு? பிசாசைக் கண்டது, யாரு?ன்னு கேட்டு, திணற அடிப்பா...ஆனா, மனோன்மணி! பொன்னிக்கு நல்ல புத்திக்கூர்மை, தெரியுமோ....பலபேர்......பலபேர் இடக்கட்டும், என்னைப் போன்றதுகள், யார் எதைச்சொன்னாலும், நம்பிவிடுகிறோம்; ஆனா, பொன்னி ஆராய்ந்து பார்க்காமல், எதையும் ஒப்புக்கொள்ளவே மாட்டாளே..."

"ஆராயாமல், இருந்திருந்தா, உலகத்திலே, ஒரு முன்னேற்றமும் ஏற்பட்டிருக்காதே. எங்கள் வைத்தியத் தொழிலேயே எடுத்துக் கொள்ளுங்க. நோய்நொடி ஏற்படுவதே, தெய்வத்தாலே என்று, கண்ணைமூடிக்கொண்டு நம்பிக் கொண்டிருந்தார்கள், ஒரு காலத்திலே. பூஜைபோடுவது, பூஜாரியிடம் மண்டிபோடுவது, முடிக்கயிறு, மந்திரம்போட்ட தண்ணீர், இவைகளாலே நோய்நொடி தீர்ந்து போகும் என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள்; இங்குமட்டும் அல்ல! எல்லா வகையிலும் அற்புதம் செய்துகாட்டிய மேனாடுகளிலேகூட!! மாந்தரீகன், சூனியக்காரி, குட்டிச்சாத்தான்; இவைகளைப்பற்றிய பயம், நம்பிக்கை, சீமையிலேகூட வெகுகாலம் இருந்துவந்தது. சூனியக்காரிகளால்தான், வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது, காய்ச்சல், கைகால் பிடிப்பு, முடக்குவாதம், இவைகள் எல்லாம் வருகின்றன, என்று எண்ணிக்கொண்டு, யாராவது பாவம், அலங்கோலமான கிழவியைக்கண்டா, கல்லால் அடிப்பது, சிறையிலே போடுவது, கட்டி வைத்துக்கொளுத்துவது..."

"சகலமும் தெரிந்தவர்கள் இருக்கிற இடம் சீமை, என்கிறார்களே... அங்குகூடவா இப்படி...?"

"ஆமாம்! அதிலே என்ன ஆச்சரியம்!! அறிவுத்தெளிவு ஏற்படாததற்கு முன்பு, அங்கேயும் நம்முடைய நாட்டைப் போலத்தான் ......"

"மனோன்மணி, அவாளவாளுக்கு 'பூர்வகர்மம்' எப்படி இருக்குதோ, அப்படித்தான் நோய் ஏற்படுவது, அவர்கள் வதைபடுவது என்பது நமது நாட்டு ஐதீகம்"

"நமது நாட்டிலே மட்டும் அல்ல, எல்லா நாட்டிலும். நோயின் காரணம், அதற்கான மருந்து வகை இவைபற்றித் தெரியாமலிருந்த போது, எல்லா நாடுகளிலேயும், கடவுள் விதிக்கும் கடுமையான தண்டனைதான், நோய் என்று நம்பிக்கொண்டு இருந்துவந்தார்கள். இப்போது, நோய்கள் ஏற்படுவதே, கிருமிகளால், கண்ணுக்குக் கூடத் தெரியாத பூச்சிகள், பூதக் கண்ணாடி மூலமாகப்பார்த்தால் மட்டுமே தெரியக்கூடிய பூச்சிகள்—

அவைகளாலேதான் ஏற்படுகின்றன என்பது, விளக்கப்பட்டுவிட்டது. பூச்சிகளை அழிக்கத்தான் மருந்து! மறுபடியும் பூச்சிகள் சேராமலிருக்கவும் மருந்து!

பட்டுவுக்கு, வெறும் நரம்புக் கோளாறு. நரம்புக் கோளாறு, பலம் குறைவதாலே வரலாம்—எக்கச்சக்கமாக, வலிவுக்கு மீறிய வேலை செய்வதாலே ஏற்படலாம், திடீரென்று ஏற்படும், சந்தோஷம், துக்கம், திகைப்பு இதனாலே எல்லாம் ஏற்படலாம். படுத்துக் கொண்டிருக்கிறீர்கள்—பாதி தூக்கம்னு வைத்துக் கொள்ளுங்களேன். என்னமோ மேலே விழறது—சில்லுன்னு—அப்ப, எப்படி ஆகிவிடுகிறிங்க......?"

"மனம் படபடபடன்னு அடித்துக்கொள்ளும், உடம்பு வெடவெடன்னு ஆடும்......"

"சிலபேருக்கு, உடம்பு சில்லிட்டுப் போய்விடும், வியர்வையாக் கொட்டும்......"

"அப்படித்தான் ஆகிவிடும். பயம்...அதனாலே..."

"பார்த்திங்களா — பயமே ஒரு வகையான நோயாகிவிடுகிறது. அதுபோலத்தான், உடலுக்கோ, உள்ளத்துக்கோ, எந்தக் காரணத்தாலாவது அதிர்ச்சி ஏற்பட்டா, நோய் உண்டாகும். நோய் அதிகமாவதும், அதிகமாகாதிருப்பதும், உடலிலே இருக்கிற வலிவைப் பொறுத்து இருக்குது. பட்டுவுக்கு, இருக்கவேண்டிய அளவுக்கு வலிவு இருக்குது. அதனாலே, மயக்கம், நோய் அளவு வளர்ந்துவிடாது — அடிக்கடி ஏற்பட்டுத் தொந்தரவு கொடுக்காது. ஊசி போட்டதுமே, பட்டுவுக்கு, நிம்மதி உண்டாகிவிட்டது."

"ஊசி போட்டயா......அப்படிச் சொல்லு...அதனாலேதான், உடனடியா நோய் போய்விட்டது..."

"இப்ப நீங்களே இப்படிச் சொல்றிங்க. முதலிலே, எவ்வளவு எதிர்ப்புத் தெரியுமா, ஊசி போட்டுக்கொள்ள......"

"இப்பக்கூட, எனக்கு ஊசி போட்டுக்கொள்ளப் பிடிக்கறதில்லே, மணி! டாக்டர்களும், எதற்கு எடுத்தாலும் ஊசி போடறதும், சரியில்லே......"

"ஊசி குத்துவது, சில சமயத்திலேதான் இருக்கவேணும், என்பதுதான், என்னுடைய எண்ணம் கூட. சிலருக்கு, இப்ப, எதற்கு எடுத்தாலும், ஊசி போட்டுக் கொள்வதிலே ஒரு பிரியமே ஏற்பட்டுவிட்டது. என்னிடம் வாடிக்கையாக, வைத்தியம் செய்து கொள்ள ஒரு சீமாட்டி வருவாங்க......"

"அதென்ன, சீமாட்டி என்று சொல்லிவிட்டே, பேரைச் சொல்லாமே...எனக்குத் தெரியப்படாதோ, அவளோட பேரு..."

"பெயரைச் சொன்னா உங்களுக்குத் தெரியாதே என்பதற்காகத்தான் சொல்லல்லே. மிராசுதாரர் வீடு. அந்த அம்மா, என்னை வந்து பார்க்கும்போதே, தூக்கமே இல்லே, கைகால் ஒரே குடைச்சல், மண்டை இடி, வயிற்றுவலி, பசியே இல்லே, என்று எதையாவது சொல்லுவாங்க...சொல்லிவிட்டு, எதாவது ஊசிபோடு என்பாங்க......"

"வலி எடுக்கறதில்லையா அவளுக்கு?"

"ஊசி போட்டா, வலி ஏன் எடுக்கப்போகுது. குத்துவதற்கு முன்னாலேதான், அந்த இடத்திலே வலி தெரியாதிருக்கும்படி, மருந்து தடவிவிடுகிறோமே......"

"ஆமாமாம்! அந்த மருந்து தடவிவிடாவிட்டா, துடிதுடித்துப் போகமாட்டாளா, ஊசி குத்திக் கொள்றவா......"

"ஊசிபோட, மட்டுமா? பெரிய பெரிய ஆபரேஷன் செய்கிறார்களே, அப்போது, எந்த இடத்திலே அறுவை நடத்தவேண்டுமோ, அந்த இடமும், அதையொட்டி இருக்கிற இடமும் 'மரத்து'ப்போகும்படி, ஊசி போட்டு மருந்தைச் செலுத்திவிடுவதுதான் இப்ப, இருக்கற முறை......"

"மனோன்மணி! ஆபரேஷன் என்று சொன்னதும், ஞாபகம் வந்தது. தாய் வயித்திலிருந்து குழந்தையை, எடுக்கறாளே ஆபரேஷன், செய்து, அது அதிசயம்தாண்டிம்மா, பெரிய அதிசயம்."

"இப்ப, அது, சர்வ சாதாரண மாச்சே! இப்ப ஆபரேஷன், என்னென்ன செய்கிறாங்க, தெரியுமோ? இருதயவலி என்று, அங்கேகூட ஆபரேஷன் செய்து பார்த்து, மருந்து போட்டுச் சரிப்படுத்துகிற முறை வந்திருக்குது."

"இருதயம்தான், இருக்கறதிலேயே, முக்கியம்; உயிர்நாடி, என்கிறு......"

"ஆமாம்......அதிலே இருக்கிற, நரம்பு எதாவது பழுதாகிவிட்டிருந்தாக்கூட, அறுத்துப் பார்த்து, சரிசெய்துவிட முடியும்; அவ்வளவு பிரமாதமான வளர்ச்சி ஏற்பட்டுவிட்டிருக்குது. மண்டைக் குடைச்சல் என்று, முன்னே, என்ன செய்வோம்?......"

"எங்க பாட்டி, ஒட்டடையை சுண்ணாம்பிலே குழைச்சிப் போடுவா, மண்டைக் குடைச்சல் நொடியிலே போய்விடும்."

"அது அந்தக் காலத்திலே! மார்வலி வந்தா, மான் கொம்பை இழைச்சிப் போடுவது; வயித்துவலி வந்தா சந்தனத்தை அப்பிக்கொள்வது! இப்ப, அதுவல்ல..."

"ஏதோ மடத்திலே...பேர் கவனமில்லே...மண்டைக் குடைச்சல் போக, ஒரு தைலம் காய்ச்சித் தருகிறாளாம்...நாற்பது நாள் அதைத் தேய்த்துத் தலை முழுகி வந்தா, மண்டைக் குடைச்சலே, போயிடுதாமே."

"தைலம், பஸ்பம், எதற்கும் குணமாகாத மண்டைக் குடைச்சல் கூட உண்டு. சூடு அதிகமாகிவிட்டா, மண்டை குடையும்—ஓயாத சளி இருந்தா, மண்டை குடையும் — கவலையும் கலக்கமும் நிறைய இருந்தா மண்டை குடைச்சல் எடுக்கும். இதை எல்லாம், மருந்து குணமாக்கிவிடும். ஆனா, சில பேருக்கு மண்டைக்கு உள்ளே, புண் ஏற்பட்டுவிடும், அல்லது தேவைப்படாத, சதை வளரும்."

"சதை வளருமா......? மண்டைக்கு உள்ளேயா?"

"ஆமாமாம்! பயிருக்குப் பக்கத்திலே, களை தானாக முளைத்துவிடுதே, அதுபோல. களை எடுத்தாத்தானே, பயிர் வளரும் செழிப்பா...ஆனா, களை எடுக்கற வேலைக்கு, நாம் போனா, என்ன ஆகும்? களையைப் பறித்து எடுக்கறதுக்குப் பதிலா, பயிரையே அழித்துவிடுவோமல்லவா? அதுபோலத்தான், உடலுக்குத் தேவையில்லாத சதை உருண்டை முளைக்கறது உண்டு......"

"மண்டைக்கு உள்ளேயா......?"

"ஆமாம்! வெளிப்பக்கமா இருந்தாத்தான் தெரிந்துவிடும்—சுஜ

பமா வைத்தியம் செய்துவிடலாமே......"

"மண்டைக்கு உள்ளே, உருண்டை முளைத்திருக்குது, என்பது, எப்படித்தான் தெரியும்?"

"வழி இருக்குது. சந்தேகம் தோன்றிணு, முதுகு எலும்பு இருக்குதே, அதிலே ஊசிபோட்டு, அங்கே ஒடிக்கொண்டு இருக்கற 'தைலம்' இருக்குதே, அதைக் கொஞ்சம் எடுத்து, பரிசோதனை செய்து பார்த்தா, மண்டைக்கு உள்ளே ஏதாவது சதை உருண்டை முளைச்சிருக்கா என்பது தெரிந்து விடும்..."

"உம்! சொல்லு, சொல்லு. கேட்கக் கேட்க அதிசயமா இருக்கு..."

"சதை உருண்டை இருப்பது தெரிந்துவிட்டா, அதை அறுத்து எடுத்துவிடணும்... இல்லையாணு, அது வளர்ந்து வளர்ந்து, மண்டையிலே இருக்கிற, மற்றவைகளைக் கெடுத்து அழித்துவிடும்..."

"மண்டைக்கு உள்ளே இருப்பதை எப்படி அறுத்து எடுப்பது?"

"எடுக்கருளே! மண்டை ஓட்டையே, தேவைப்படுகிற அளவுக்குப் பெயர்த்து எடுத்து, உள்ளே தெரிகிற, உருண்டைச் சதையை அறுத்து எடுத்துவிடுகிருர்கள்."

"எந்தச் சீமையிலேடி இந்த அற்புதம்?"

"இப்ப, நம்ம நாட்டிலேயேகூட நடந்திருக்குது"

"சரிதான்! இனிக் கொஞ்ச நாள் போனு, மோட்டார் சாமான் கெட்டு விட்டா, எடுத்துப்போட்டுவிட்டு, வேறே சாமானைப் பொருத்துவது போலச் செய்துவிடுவான்னு சொல்லு..."

"இன்னும் கொஞ்ச நாள் போகணுமா! இப்பவே; அதை எல்லாம் செய்துகொண்டுதான் இருக்கிரு! கண் போய்விட்டா, வேறே கண் வைத்துவிடுகிருளே"

"கண்ணுடிக்கண்ணுன்னு சொல்ருளே, அதுவா?"

"செச்சே! அது கர்நாடகமுறை! நம்ம கண்போலவே! அதாவது, ஒருத்தருக்கு உள்ள கண் கெட்டுப் போய்விட்டா, அதை எடுத்துவிட்டு, வேறே ஒருத்தருடைய, நல்ல கண்ணை எடுத்து, அந்த இடத்திலே வைத்துத் தைத்துவிடுவது"

"இது என்னடி கண்ணப்ப நாயனர் கதை போல இருக்கே..."

"அது கதை! இது இப்ப, நடக்கற விஷயம்!"

"பகவானுடைய கண்ணிலே இரத்தம் கொட்டிடவே, கண்ணப்ப நாயனர், தன் கண்ணை பெயர்த்து பகவானுடைய கண்ணுக்கினர்னு..."

"கதை! கடவுளுக்காகப் பக்தன் செய்யக்கூடியதை, மகிமையை, விளக்கும் புண்ய கதை! ஆனு இது, மனிதர்களுக்கு மனிதரே, கண்கொடுக்கற காலம்!"

"என் கண்ணைப் பெயர்த்தெடுத்துக்கொள் என்று, சொல்ரு."

"ஆமாம்! கண், நமக்கு எது வரையிலே பிரயோஜனப்படுது? உயிர் இருக்கிற வரையிலே! பிறகு?

"பிறகு! பிடி சாம்பலாகிப் போருேம்"

"கண்? மண்ணுக்கு! அப்படித் தானே! அதற்குப்பதிலாக, கண்ணை மனிதருக்குக் கொடுத்துவிடலாம், செத்தபிறகு! சாவதற்கு முன்பு, பலபேர், தன் கண்ணை, வேறு யாருக்காவது எடுத்துக் கொள்ளும்படி எழுதிக்கொடுத்துவிடுகிருர்கள். செத்ததும், பக்குவமாகக் கண்ணைப் பெயர்த்தெடுத்து பதமாக வைத்திருக்கிருர்கள். அந்தக் கண்ணைத்தான், நான் சொன்னபடி, கண் கெட்டவர்களுக்குப் பயன்படுத்துகிருர்கள்..."

"செத்தும் கொடை கொடுக்கும், உத்தமர்கள் மணி! அப்படிப் பட்டவர்கள்! இரத்ததானம் கொடுப்பதாகத்தான் நான் இதற்கு முன்புகேள்விப்பட்டிருக்கறேன்..."

"இரத்ததானம் ஒரு காரணம், பட்டுவோட மயக்கத்துக்கு"

"என்னடி இது! பட்டு, இரத்த தானம் கொடுத்தாளா என்ன?"

"இல்லை! இல்லை! இரத்ததானம் கொடுத்ததைப் பார்த்தா... அதிலேயே இவளுக்கு மயக்கம்!"

"இவ, ஏன் அங்கே போனு?"

"இரத்ததானம் கொடுத்தவருக்கு இவ இருதய தானம் கொடுத்துவிட்டதாலே..."

"போதும்டிம்மா, உன் வைத்திய பாஷை! விளங்கும்படி சொல்லு"

"பொன்னியோட தம்பி இருக்கிருரே, அவருக்குப் பொதுத் தொண்டு செய்வதிலே ஆர்வம். அதனுலே, அவர், இரத்ததானம் தரச் சம்மதித்தார். இதற்கு முன்பு கூட ஒருதடவை, இரத்ததானம் கொடுத்திருக்கிருராம். மறுபடியும் இரத்ததானம் கொடுக்கப்போயிருக்கிருர். அவரிடம், இவ இருக்கிருளே, பட்டு, மனதைப் பறி கொடுத்துவிட்டிருக்கிரு' கூடப் போயிருக்கா, வேண்டாம், இரத்த தானம் கொடுக்காதிங்க, உடம்பு கெட்டுப்போய்விடும்னு சொல்லித் தடுக்க. அவர் கேட்கவில்லை, இரத்த தானம் கொடுத்தார். அதைப் பார்த்ததுமே இவளுக்கு மயக்கம். சமாளித்துக்கொண்டாள். பிறகு, அவரைப் பார்க்கும் போதெல்லாம், அதைப்பற்றியே பேசி இருக்கிரு! அதனுலே, மயக்கம் மறுபடியும்!!"

"அப்படியா விஷயம்! மயக்கத்துக்குக் காரணம், இதுதானு..."

"இதைவிட, மயக்கத்துக்கு தகுதியான காரணமே கிடையாது என்று கவிஞர்கள் பாடுகிருர்களே..."

"பாடுவா, பாடுவா! அவாளுக்கு என்ன! வேறு யாராரோ படுகிற வேதனையைத்தானே அவர்கள் பாட்டா பாடிண்டிருக்கா! ஏன் பாடமாட்டா? அவாளுக்கு ஏற்பட்டா, தெரியும், அந்த மயக்கம்... அது இடக்கட்டும். ஏண்டி மனேன்மணி! மறுபடியும் பட்டுவுக்கு மயக்கம் வராதே..."

"அதோ, அவளே வருகிரு, கேட்டுப்பாருங்க"

"சரிதான்...... கூட பொன்னி தான்! ஏதேது இனி யாராலும் தடுக்கமுடியாது போலிருக்குதே! வாங்கடிம்மா, புதுமைப்பெண்களா! எங்கே இருந்து வருகிறிங்க! பூந்தோட்டத்திலிருந்தா, புத்தகக் கடையிலிருந்தா..."

"என்ன இது! இன்று வருகிற போதே, வரவேற்பிலே கிண்டல் கலந்து இருக்கிறது. மணி! என்ன! முன்னலேயே வந்து, முடிபோட்டு விட்டாயா..."

"அவ, முடியும் போடல்லே, பிடியும் கொடுக்கல்லே; எல்லாம் எனக்கே தெரியும். பட்டு பெரியப்பா பெரிய முன்கோபக்காரர். அவரிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டு, சம்மதம் வாங்கிக்கொண்டு

(14-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

25–12–60.

தம்பி !

உருக்கமான கதையொன்று, நெடுநாட்களுக்கு முன்பு படித்தது நினைவிற்கு வருகிறது. உனக்கும் அதைக் கூறவேண்டும்போலத் தோன்றுகிறது. கூறுகிறேன்.

சாலைகளும் சோலைகளும் கண்டு சொக்கிட, அவர்களுக்கு நேரம் இல்லை; சாலைகளும் சோலைகளும் அங்கு இல்லவும் இல்லை; ஏனெனில் அவை சிறிது சிறிதாக அழிக்கப்பட்டுப் போய்விட்டன!

சோலைகள் இருந்தால், புள்ளினம் நிரம்பி இருக்கும்; புதுப் புதுப் பண் அமைப்போருக்குப் பாடம் தருவதுபோன்ற முறையில், இசை எழுப்பும்; அவர்கள் கேட்டு இன்புற்றிருக்கலாம்! அவர்கள் என்பதுகூடத் தவறு—அவள் கேட்டு இன்புற்றிருப்பாள்—அவனுக்குத்தான் அவள் பேச்சே இசையாயிற்றே! புள்ளினம் இல்லை, இசையும் இல்லை! இருந்திருப்பினும் அவர்கள் அதனைக்கேட்டு மகிழ்ந்திட நேரமும் இல்லை! அவர்கள், உருளைகளின் ஒலி, உருண்டோடும் வண்டிகளின் இரைச்சல், இடித்தல் வடித்தல், அறுத்தல் எரித்தல் போன்றவைகள் எழுப்பிடும் பேரிரைச்சல், இவைகளுக்கிடையிலே உழன்று கிடந்தனர்! இசை கேட்டு இன்புற நேரமும் இல்லை! கிடைத்திடின், இசையை நுகரும் இயல்பேகூடப் பழுதுபடாமல் இருந்திருக்குமோ என்னவோ, கூறுவதற்கில்லை. அவர்கள் உழைப்பாளிகள்—உனக்கு நான், எனக்கு நீ,—என்று பாடி ஆடும் நிலையினர் அல்ல!

அந்தக் கண்களிலே நான் கண்ட ஒளி! என்று கூறிக் கூறி மகிழ்ந்திடக்க அவனுக்கு நேரம் இல்லை! ஒளி இருந்த கண்கள்—உண்மை—ஆனால் அது முன்பு! இப்போது ஓரோர் சமயம், ஒளிச் சிதறல் தெரிகிறது, மறுகணம் மறைகிறது! அவள் அவனுக்காக வேலை செய்கிறாள்—அவன் அவளுக்காக உழைக்கிறான்! அவனும் அவளும் உழைத்துப் பிழைக்கும் எளிய குடும்பத்தினர்.

கவிதைகளைப் படித்திட வாய்ப்புப் பெற்றிருந்த நண்பர்கள், அவனிடம், மேலே உலவிடும் மேகத்தை, மங்கையரின் கூந்தலுக்கு ஒப்பிட்டுக் காட்டியிருப்பதை எடுத்துக் கூறியிருப்பர்—அவன் இதழில் ஒரு புன்னகை தவழும்—மறுகணம்

வாழு! வாழவிடு! (1)

மறையும்! தன் துணைவியின் குழலழகை எண்ணி மகிழ்வான்! எனினும், வேலை இருக்கிறதே—என் செய்வான்?

அந்தக் கூந்தலின் சுருளழகும், மினுமினுப்பும், அதனைக் கோதிடும்போது, கரத்தின் வழி நுழைந்து நேரே இதயம் சென்று இன்பமூட்டிடும் களிப்பும், அவன் நினைவிற்கு வருகிறது—ஆனால், அதேபோது செய்துமுடிக்கவேண்டிய வேலையின் அளவும் தெரிகிறது! மகிழ்ச்சியை, ஒரு பெருமூச்சால் விரட்டி விடுகிறான்—பிறகு? வேலை! வேலை! வேலை!!

கூந்தலுக்கு இயற்கையாக அமையாத அழகினைக் கூட்டிட, மினுக்குத் தைலம் தேடுகிறார்கள், வண்ணக் கலவை நாடுகிறார்கள், வைரம் இழைத்த அணி பணியினை, கோதி முடித்த கூந்தலில் செருகிக்கொள்கிறார்கள்—உள்ளவர்கள்!

அவள், வியர்வை பொழியும் நெற்றியிலே, வந்து வந்து விழுந்திடும், கூந்தற் சுருளை, கரத்தால், மேலுக்குத் தள்ளித் தள்ளி விடுகிறாள்! கூந்தலோ, எப்போது பார்த்தாலும் ஏதேதோ வேலைசெய்தபடி இருக்கிறாயே, என்னையும்தான் கொஞ்சம் பாரேன்! என்று கெஞ்சுகிறது!! அவளுக்கு அதற்கெல்லாம் நேரம் இல்லை! பட்டுக்கயிறு கொண்டாகிலும், கட்டி முடித்துக்கொள்ளலாம்! ஆனால், அதற்குப் பணம் வேண்டுமே? உழைப்பில் கிடைப்பது, உணவுக்கும் உடைக்கும் விடுதிக்கும் மட்டும் கட்டிவந்தாலே போதாதா, கூந்தலுக்கு அழகுதேடச் செலவிடக் கூடவா காணும்!

அவன், அந்தக் கூந்தலில் செருகிக்கொள்ள ஒரு அழகான அணிவேண்டும், என்று உணர்ந்தான். தன்கரம்கொண்டா, எப்போதும், நெற்றியிலே வந்து விழும் கூந்தற்சுருளைத் தள்ளித் தள்ளி விட்டுக் கொண்டிருக்கமுடியும்! கரத்துக்கு வேறு கடினமான வேலைகள் நிரம்ப உள்ளனவே!

எனவே, எப்படியாகிலும் கூந்தலில் அணிந்து கொள்வதற்கான அணி வாங்கியாகவேண்டும்! அவளிடம்கூடக் கூறக்கூடாது—வாங்கும் வரையில்! பிறகு? என்னென்னவோ விதமான கற்பனைகள் பாவம், அவனுக்கு! உழைப்பாளிதான், என்றாலும்; நினைவு குழம்பிப்போகும் நிலை பெற்ற வயோதிகன் அல்லவே! கட்டிளம் காளை!!

அந்த நினைவு பிறந்ததும், அவனுடைய உழைக்கும் திறனேகூடத் தன்னாலே வளரலாயிற்று. வேலை செய்யுமிடம், விரைந்து செல்கிறான், கைக்கடிகாரம், நேரமாகிவிட்டது என்பதை எடுத்துக்காட்டியதால்!

அவள், அவனைக் காண்கிறாள்—அவன் புன்னகைக்குக் காரணம் கேட்காமல்! எப்படிக்கேட்பாள்! அவள், சிந்திய புன்னகைக்குக் காரணம், கூறினானா? அவன் அவளுடைய கூந்தலுக்கு, வாங்கிச் சூட்டிடப் போகும் அழகிய ஆபரணத்தை எண்ணி மகிழ்ந்தான்! அவளோ, அவன் கரத்தில் கட்டப்பட்டிருந்த கடிகாரத்தின், தோல்பட்டைக்குப்பதிலாகப், பளபளப்பான முலாம் பூசப்பட்ட செயற்கை வெள்ளியாலான, பட்டையை (கற்பனைக் கண்களால்)க்கண்டு, புன்னகை புரிந்தாள்.

உழைப்பால் மெருகேறியிருந்த கரங்கள்—பளபளப்பான செயற்கை வெள்ளிப்பட்டையுடன் கடிகாரம் இருந்தால், அழகாகத்தான் இருக்கும்—அந்தப்பட்டை, கடையிலே கண்ணாடிப் பேழையிலே இருக்கும்போது உள்ளதைக் காட்டிலும், அழகு அதிகமாக விளங்கிடும். கடையிலே அதைக்காணும் போதெல்லாம், அவள் இதையே எண்ணுவாள். எப்படியும் அதை வாங்கிவிடவேண்டும்—அவருக்குத் தரவேண்டும்—நாமே அவர் கரத்தில் அதனைக்கட்டி விடவேண்டும் என்று எண்ணிக்கொள்வாள். அவனுக்கும் அதுபோலவே நினைப்பு—எப்படியாகிலும், கூந்தலில் செருகிக்கொள்ள அழகான அணி வாங்கி விடவேண்டும் என்று.

அவளுக்குத் தன் கூந்தலிற் செருகிக்கொள்ள ஒரு அழகான அணி இல்லையே என்று நினைப்பு எழவில்லை.

அவனுக்குத் தன்கைக்கடியாரத்துக்குத் தோலாலான பட்டையைவிட, பளபளப்பான செயற்கை வெள்ளிப்பட்டை இருந்தால் அழகாக இருக்கும் என்ற எண்ணம் தோன்றவில்லை.

அவன், அவள் கூந்தலழகையே எண்ணிக் கிடந்தான்.

அவள், அவன் கரத்திலே பளபளப்பான பட்டை இருக்கவேண்டும் என்பதுபற்றியே எண்ணிக்கொண்டு இருந்தாள்.

அவளுக்காக அவன்! அவனுக்காக அவள்!!

இவர்களின் தூய காதலைக் கண்டு, காதலர்களிடம், கஞ்சத்தனம் படைத்தோரிடம் குவிந்துகிடந்த பணம், உருண்டோடி வந்து, உறவாடி உலாவிடவா, முடியும்? அதுதான், சிக்கிக்கொண்டு விட்டோம், இனி நம்மை ஏவி என்னென்ன சேழிவுகளைச் செய்கிறார்களோ, என்றெண்ணி வாயடைத்துக் கிடக்கிறதே!!

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள்

அல்லவா! தூய காதலால் கட்டுண்டு கிடந்தவர்களுக்கும் வழி கிடைத்தது.

"கண்ணாளா! கண்ணை மூடிக்கொண்டு, தங்கள் கரத்தை இப்படி என் முன் நீட்டுங்கள்!" என்று கொஞ்சுமொழி பேசினாள் கோதை, ஓர்நாள்.

இதென்ன பந்தாடும் சிறுமிபோலப் பேசுகிறாளே என்றெண்ணினான் வியப்புடன். அவளோ, செல்லக் கோபம் காட்டி, சேல்விழியால் களிப்பூட்டித், தேனை மொழியாக்கித் தருகிறாள்.

என்ன? என்ன? ஏன்? என்றெல்லாம் கேட்கிறான்—அவள் நினைவிலே தன்னை இழைத்துவிட்ட காதலன்.

சொல்கிறபடி கேட்கவேண்டும்! உம்!—என்று மிரட்டுகிறாள்—கரத்தைப்பற்றி இழுக்கிறாள்.

"கண்ணே! அப்படியே திருப்பு முகத்தை!" என்று அவன் கட்டளையிடுகிறான்.

"ஏன்?" என்று அவள் கேட்கிறாள், தழதழத்த குரலில்.

"உன் அழகான கூந்தலிலே இடம் பெற்று, புது அழகு பெறத் துடிக்கும் இந்தக், 'கொண்டைச் செருகு' உன்னைக் கெஞ்சுகிறது, பாரேன்!" என்று கூறிக், கடையிலே வாங்கிவந்த, அழகுமிகு அணியினைக் காட்டுகிறான்.

அவள், அதைப் பார்க்கிறாள்! வியப்புடன் பார்க்கிறாள்!! அகலக் கண்களைத் திறந்தபடி பார்க்கிறாள்!!

வெற்றி வீரன், பரிசாகப் பெற்ற வீரக்கழலை, காதலியிடம் காட்டும் போது, எத்துணை மகிழ்ச்சியும் பெருமிதமும் அவன் விழியில் இருந்திடும்! அவன், அந்த அணியை அவள் காணும்படி, ஏந்தியபடி நிற்கிறான், வெற்றி வீரன் போல்!!

"எனக்கா! அன்பே! நீங்கள் வாங்கிவந்தீர்களா! தங்களுக்குத்தான் என்மீது எத்துணை அன்பு! கண்ணாளா! இத்தனை கனிவு கொண்டுள்ள, தங்களை என் மணாளராகக் கொண்டுள்ள, நானே பாக்கியசாலி! புதிதாகக் கட்டிமுடித்த மாளிகையிலே ஓர் புறம் வெட்டப்பட்டிருக்கும் பளிங்குக் குளத்திலே, பட்டு மெத்தைகள் போடப்பட்டுள்ள உல்லாச ஓடம் ஒயிலாக ஆடிநிற்பதைக் கணவான் காட்டிடும்போது, அந்தக் காரிகைக்கு ஏற்பட முடியாத, களிப்பு, என் அரசே! எனக்கு இப்போது ஏற்படுகிறது. என்னைப் பற்றிய எண்ணம், உமக்கு எத்துணை இருந்தால், என் கூந்தலுக்கு இந்தச் 'செருகு' இல்லை என்பதை அறிந்து, பெற்றுத் தந்திருப்பீர்!! அதைத்தரும் கரங்களைக் கண்களிலே ஒத்திக்கொண்டு, காலமெல்லாம் இருந்திடலாம் போல் தோன்றுகிறது! — என்றெல்லாம், நாடகமேடையானால், பேசிடலாம் — இது வீடு — அவள் பேசவா முடியும் — பேசவா செந்தாள்! அவள்கண்கள், இதுபோல மட்டுமல்ல, காதற் காவியமே தீட்டிக் காட்டிற்று.

திரும்பு! நானே என், கரத்தால், கொண்டைச் செருகினை உன் கூந்தலில் சூட்டி மகிழவேண்டும்— என்கிறான், அவன்.

புன்னகை பூத்திடும் நிலையிலே நிற்கிறாள் பூவை —அவன் எதிரில்! அவன் முகவாய்க்கட்டையைத் தடவியபடி!!

அவன் அவளைத் திருப்பி நிற்கச் செய்யும் எண்ணத்துடன், தொட்டு இழுக்கிறான்! துடியிடை, சிலையாகி நிற்கிறாள்!! வேண்டாம்! வேண்டாம்!என்று குறிகாட்டி நிற்கிறாள்.

இதற்கு வெட்கமா! இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகுமா! நாம், தனியாக இருக்கும்போதுகூடவா!!— என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது, அவனுக்கு — ஆனால், செயலல்லவா முக்கியம் பேச்சைவிட — எனவே அவன், அவளுடைய தோளைப்பிடித்து இழுத்தபடி திருப்ப முயற்சிக்கிறான். அவள், கண்கள் துளிர்க்கின்றன! உற்றுப் பார்க்கிறான்! கண்ணீர்த் துளிகள், வெளிப்பட்டுக், கன்னத்தில் வீழ்கின்றன!

"அன்பே! என்ன இது?" என்று கேட்கிறான்— அவள் அவன் மார்மீது சாய்கிறாள். அணைத்தபடி, கண்ணீரைத் துடைக்கிறான். தலையில் முக்காடிட்டது போலக் கட்டப்பட்டிருந்த துண்டு நழுவி விடுகிறது; கூந்தல் புரளவில்லை—கத்தரித்து விடப்பட்டுக், கழுத்தளவோடு நிற்கிறது!!

பொங்கல் மலர்

சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூ. 1—50 ஆகும். முன் பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் மலர் பதிவுத் தபால் அனுப்பப்படும். பணம் அனுப்பும்போது சந்தா எண் குறிப்பிட வேண்டும்.

பொறுப்பாளர்.

கூந்தலில் செருகிக் கொள்ள, அணிகொண்டு வந்தான் — சுருண்டு அடர்ந்து புரண்டு கிடக்கும் கூந்தல் இல்லை!!

எப்படி இருக்கும்? அதைத்தான், விலைக்கு வாங்கிய கடைக்காரன் தொட்டுப் பார்த்து 'பட்டு' என்கிறான் — அளவு எடுத்துப்பார்த்து அற்புதம் என்கிறான்—கொடுத்தபணத்தைக் கணக்கெடுத்து, கிடைக்கப்போகும் பணத்துடன் ஒப்பிட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறானே!

ஏழையிடம் இருந்தது இந்த அழகு!

இந்த 'அழகு' தேடி அலைகிறார்கள், பணம் படைத்த பெருமாட்டிகள்.

மருத்துவர்கள் கொடுத்தவை அனைத்தும் பயனளிக்கவில்லை. செம்பட்டை போகவில்லை!! இதோ கற்றைக்குழல்! ஆனால் அது, ஒரு ஏழையிடமல்லவா இருந்துவந்தது—மினுக்குப் பெருமல்!!

வாடைக் காற்றிலே முன்பு ஆடி இருக்கும்—இனி மாளிகையிலே கிடைக்கும் பூங்காற்று அல்லவோ, இதற்கு!

காதற்கணவனுக்குக் கைக் கடியாரத்துக்கான செயற்கை வெள்ளிப் பட்டை வாங்க, காரிகைக்குப் பணம் வேண்டும்! ஒவ்வொரு நாளும் கண்ணாடிப் பேழைக்குள் இருந்துகொண்டு, அந்தப் 'பட்டை' 'உன் கணவனுக்காகவே காத்துக்கொண்டிருக்கிறேன், இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கு இருக்கமுடியும்? உள்ளவன் எவனாவது வாங்கிக் கொண்டு போய்விட்டால்!! பிறகு, உனக்குப் பெருத்த ஏமாற்றம் ஏற்படும்! உடனே வாங்கிக்கொண்டு, போ!!'—என்று பேசிற்று. பணம் இல்லை! என்ன செய்வது? பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தபடி இருந்தாள்.

கூந்தல் தயாரித்து விற்பனை செய்யும் கடைக்காரன், உற்றுப் பார்த்தபடி இருந்தான், ஒவ்வொரு நாளும்—அவளை அல்ல—கூந்தலை!!

அலைந்து திரியும் இவளிடம் இவ்வளவு அழகான கூந்தல்—இதுபோல வேண்டுமென்று அங்காடி அங்காடியாக அலைந்துதிரிகிறார்கள், சீமாட்டிகள்!—இந்தப் பெண்ணின் கூந்தல் கிடைத்தால்....!! —என்று நினைத்தான், நினைத்தது நடந்தது. கூந்தலை வெட்டி எடுத்துக்கொண்டு கொடுப்பதைக் கொடு என்றாள். அவன், பக்குவமாகப் பேசினான்—கூந்தல் போய்விடுகிறதே என்று கவலைப்படாதே—வாலிபப் பருவம் உனக்கு—கருகருவென விரைவிலே கூந்தல் மீண்டும் வளர்ந்துவிடும்—வளராவிட்டால் கூட என்ன—கவனிக்காமல் இருந்தால், கூந்தலில், சிக்கு ஏற்படும், சுண்டு சொறி கிளம்பும்—என்றான்!

வெட்டி எடுக்கப்பட்ட கூந்தலைக் கண்டதும், அவளுக்கு ஒரு கணம் வருத்தமாகத்தான் இருந்தது. நமது கூந்தலா இத்தனை நீளமாக, இவ்வளவு அடர்த்தியாக, கவர்ச்சியாக இருந்தது!!—என்று எண்ணினாள். மறுகணமோ, அதை எடுத்துக் கொடுத்துவிடுவதால், கிடைக்கும் பணத்தைக்கொண்டு வாங்கப்போகும் பொருளை எண்ணிக்கொண்டாள், முகம் புதுமலராயிற்று!

அந்தப் 'பட்டை' அவளிடம் இருந்தது — அவன் கட்டித் தழுவியபடி, 'செருகு' சூட நினைத்துப் பார்க்கும்போது, கூந்தல் வெட்டி எடுக்கப்பட்டுப் போய்விட்ட அலங்கோலத்தைக் கண்டு கண்ணீர் உகுக்கும்போது!

சூட்டி மகிழ நினைத்தார்—அவருடைய மகிழ்ச்சியைப் பாழாக்கிவிட்டேனே — என்றுதான், அவள் கவலைப்பட்டாள்.

அவருக்கு அந்த மகிழ்ச்சி கிடைக்கவில்லை-நான் அவர் கரத்தில், பளபளப்பான செயற்கை வெள்ளிப் பட்டையை மாட்டி மகிழ்ச்சி பெற, அவர் மகிழ்ச்சியை இழக்கிறார்—என்று எண்ணினாள். நெஞ்சு நெகிழ்ந்தது.

"கண்ணாளா! நெடு நாட்களாக, இதை வாங்கித் தங்கள் கடிகாரத்துடன் இணைத்துக், கரத்தில் அணிவித்துப் பார்த்து மகிழ ஆவல் — அதை நிறைவேற்றிக்கொள்ளவே, கூந்தலை இழந்தேன்! கோபம் கொள்ளாதீர்! கூந்தல் மீண்டும் வளர்ந்துவிடும்—இன்று கொண்டுவந்ததைப் பிறகோர் நாள் என் கூந்தலிலே செருகி மகிழலாம்! இப்போது இன்பமே! கரத்தை நீட்டுங்கள்!"—என்று கூறியபடி நின்றாள். அவன் ஏதும் பேசவில்லை. கரத்தை நீட்டினான், கடிகாரம் இல்லை!!

அவளுடைய கண்கள் கேள்விக் குறியாயின!

அவனுடைய அணைப்புப் பதிலளித்தது!

அந்தக் கடிகாரம்,தான் இது,—என்று கொண்டைச் செருகைக் காட்டினான்!

செருகு இருந்தது, கொண்டை இல்லை!

கடிகாரப்பட்டை இருந்தது, கடிகாரம் இல்லை!!

அவர்கள் இருவரிடமும் காதல் ததும்பி இருந்தது—கண்ணீராக வழிந்தது.

*

அண்ணா! கதை சுவைதான்—காதல் மாண்பினை விளக்கிடத்தான் செய்கிறது. எனினும், இந்தக்

கதை யாது கருத்துடன் கூறிடுகிறாய். வெறும் கதைபேசும் பழக்கம், நமக்குள்ளே இடையாதே!— என்றுதானே தம்பி! கேட்கிறாய். காரணம் இருக்கிறது!

*

இந்திய ஒற்றுமை — பாரதப் பண்பாடு — ஏக இந்தியா — எனும் எழிலோவியம் காணவேண்டும் என்று நேரு பண்டிதர், துடியாய்த் துடிக்கிறார் — அதனை அவர் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம், சொல்லியும் வருகிறார். கனிவாகப் பேசுகிறார் சில வேளை, கடுங்கோபம் காட்டுகிறார் மற்ற வேளைகளில். விளக்கம் தருகிறார் சில சமயங்களில், இது உணரப்படவேண்டியது, உண்மை என்று உபதேசமளிக்கிறார், மற்ற வேளைகளில், 'ஏக இந்தியா' என்பது பற்றிப் பேசிப் பேசி, அவரே, அதிலே 'இலயித்து' விட்டாரோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது, அவருடைய போக்கைக் கவனிக்கும்போது.

'ஏக இந்தியா' என்பது இன்றுள்ள அரசியல் அங்காடியிலே மதிப்புள்ள பொருள்—எனவே, அதைக் கொள்வோம், என்ற போக்கினர் உளர் — அவர்களின் உரையைக் குறித்து, நாம் கவலைப்படத் தேவையில்லை. காற்றடிக்கும் பக்கம் திரும்புவர்.

பண்டிதர்போல, நெகிழ்ச்சியுடன், 'ஏக இந்தியா' என்ற தத்துவம்பற்றிப் பேசுபவர், போக்குதான், அனுதாபத்துடன் கவனிக்கத்தக்கது.

"ஆமாம், அதனால் என்ன? எல்லாம் ஒண்ணுதான், இதை எவன் மறுக்கமுடியும்? எது எங்கே கட்டினு என்ன? இவனுங்க யாரு இதைக்கிளப்பிவிட!!"—என்று இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசிடும், காமராஜர்களின், போக்குப்பற்றி கவலைப்படவேண்டியதே இல்லை! ஓட்டுப்பெட்டியிலே ஓட்டை விழுகிற வரையிலே இப்படிப்பட்டவர்கள் இது போலத்தான் ஒய்யாரப் பேச்சுப் பேசிக்கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டிருப்பார்கள்.

தம்பி! நான் கவனிப்பது, உள்ளபடி, நெகிழ்ச்சியுடன், நம்பிக்கையுடன், 'ஏக இந்தியா' என்ற கொள்கையை அணைத்துக்கொண்டிருக்கும், சுயநலமற்ற, பதவிப்பற்று அற்ற, சிலருடைய போக்குப்பற்றித்தான்.

இந்தத் திங்கள், டில்லியில் 'பாரதம்'பற்றிப் பண்டித நேரு பேசுகிறார், பாசம் நிரம்பிய பேச்சு என்று கூறலாம். துக்கம்தோய்ந்த குரலிற்பேசினார் என்றுகூடக் குறிப்பிடலாம். தென்னாட்டுக்காரர்கள் நடாத்தும் கல்விக்கூட விழாவிலே பேசும்போது, 'இந்தியா ஒன்று' என்ற உணர்வு இருக்கவேண்டும், மொழி, மாநிலம் என்பவை காரணமாகப் பேத உணர்ச்சி, பிளவு மனப்பான்மை கூடாது—அது கொடும் தீது! —என்றெல்லாம் பேசி இருக்கிறார்.

அதற்குச் சின்னாட்களுக்கு முன்பு, பம்பாயில், 'மேதைகள்' சிலர் கூடி, இந்தியாவின் ஒற்றுமை குறித்துப் பேசி இருக்கிறார்கள் — சர். சி. பி. இராமஸ்வாமி ஐயர், ஆச்சாரியகிருபாளினி, முன்ஷி, ஆகியோர்.

இவர்களின் பேச்சிலே, வாதங்கள், விளக்கங்கள், மறுப்புக்கு மறுப்புகள், போன்ற இலட்சணங்கள் நிரம்ப உள்ளன—மன நெகிழ்ச்சி — பண்டிதரிடம் உள்ளது போன்றது—இருப்பதாக எனக்குப் படவில்லை.

சர். சி. பி. இராமஸ்வாமி ஐயர் விஷயத்தையே, தம்பி! கவனித்தால், அவர், இந்திய ஒற்றுமை குறித்து மட்டுந்தான், திறம்படப் பேசக் கூடியவர் என்று சொல்வதற்கில்லை — எதிர்தரப்பிலே இருக்க நேரிட்டாலும், இதே திறமையுடன், இந்தியா ஒன்றாக இருப்பது நல்லதுமல்ல, நடைபெறுவதும் சாத்தியமில்லை என்று மன்றத்தினர் பாராட்டத்தக்க விதத்திலே பேசக்கூடியவர் என்பது விளக்கமாகும்.

சர். சி. பி. முன்பு திருவிதாங்கூர் சமஸ்தான திவானாக இருந்தார். அப்போது, அவருடைய ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தத்தக்க, அகன்ற கண்களின் ஒளி, அரண்மனைக்கே ஓர் புதுமெருகு கொடுத்தது என்று பேசினர்! மக்களின் எதிர்ப்புச் சக்தியை 'பத்மநாபதாசரின்' சார்பிலே நின்று, அடக்கிய ஆற்றல் மிக்கவர், சர். சி. பி.

அப்போது வெள்ளையர் ஆதிக்கப் படலம் முடிவுற்று, அவர்கள் இங்கு உள்ளவர்களை ஆட்கொண்ட படலம் ஆரம்பமாயிற்று — வைதீக பாஷையிலே கூறுவதானால், தம்பி! சுதந்திரோதயம், ஏற்பட்டது!

திவான் சர். சி. பி. என்ன செய்தார்?

தலைமைநிலைய அறிக்கை (அ) 13/60

தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம், **1961** சனவரித் திங்கள் **21, 22** (சனி, ஞாயிறு) நாட்களில் வ. ஆ. மாவட்டம் வேலூரில் நடைபெறும்.

அறிவகம்', சென்னை-13
20—12—1960

கே. ஏ. மதியழகன்,
தலைமை நிலையச் செயலாளர்.

பாரதம் ஒரே தேசம்—பிரிக்க முடியாதது—பிரிக்கக் கூடாதது—என்று, இன்று பேசுகிறார். உம்! ஆற்றலுடன்!! ஆற்றலுக்கு என்ன பஞ்சமா!!

அன்று, அதே ஆற்றலுடன், சர். சி. பி. சொன்னது யாது?

திருவிதாங்கூர் தனி அரசு! அதை ஏக இந்தியாவில் பிணைத்துவிடுவதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்—என்று முழக்கமிட்டார்.

தம்பி! வெறும் பேச்சோடு இல்லை!! பாகிஸ்தானோடு, திருவிதாங்கூர் தனியாக ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளும்—பண்டமாற்று முறை ஏற்பாடாகும்—இந்தியாவிலிருந்து அரிசி வராவிட்டால் கவலை இல்லை—பாகிஸ்தானம் அரிசி தரும்—என்று கூறினார்—ஏற்பாடுகளைக்கூடத் துரிதமாக்கினார்.

நாடு துண்டாடப்படுவது கூடாது என்று இன்று பேசுபவர், அன்று, திருவிதாங்கூர், தனி அரசு நடத்த முடியும் என்று பேசினார்.

எனவேதான், தம்பி! அவர் போன்றாரின் பேச்சை, மேதைகளின் பொழுதுபோக்கு என்ற அளவிலேதான் கவனிக்க வேண்டும்—அது ஒரு பிரச்சினை அல்ல, என்று நான் கருதுகிறேன்.

பண்டிதரின் போக்கு அவ்விதம் என்று தள்ளிவிடுவதற்கில்லை.

கதையிலே வருகிற காதலர்போல, அவருடைய நெஞ்சு நெகிழ்ந்துவிடுகிறது.

எதை இழந்தேனும் பாரத ஒற்றுமையைப் பெற்றாக வேண்டும் — எத்தகைய கஷ்ட நஷ்டம் ஏற்படினும், ஏக இந்தியா எனும் ஏற்பாடு, பழுதின்றிப், பங்கமின்றி இருந்துவர வேண்டும் என்று, பண்டிதர் கூறுகிறார்.

அதற்காக, எதையும் இழக்கத் துணிகிறார் என்பது மட்டுமல்ல, எதனையும் அழித்தொழிக்கவும் தயாராகிறார்.

"வங்கமே! சிங்கமெனச் சீறாதே! பாரத ஒற்றுமைக்காக, எதையும் இழந்திடச் சம்மதிக்கவேண்டும். பெருபாரியானாலும் சரி, வங்கமொழிச் சிறப்பானாலும் சரி, கவலைப்படக்கூடாது." என்று கூறுகிறார்.

"பாஞ்சாலமே! வீரக் கோட்டமே! உனக்குக் கூறுகிறேன், உன் தன்மானம் பறிக்கப்படுகிறது என்றாலும், பாரத ஒற்றுமைக்காக, அதனையும் இழந்திடச் சம்மதிக்க வேண்டும். முழக்கம் எழுப்பாதே! முணுமுணுத்தால்கூட, அன்னை பாரததேவி அழுதிடுவாள்! அவள் வாழ, நீ வதைபடுவதானாலும், நஷ்டம் இல்லை! வீரப் புதல்வர்கள் வெஞ்சிறையில் உழல்கிறார்களே, என்பதை எண்ணிடும்போது வேதனையாகத்தான் இருக்கும்! ஆனால் அந்த வேதனையைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்—பாரத மாதாவுக்காக!"

"இரத்தக் காடாகிறதே பாஞ்சாலம், என்கிறாய்! பாஞ்சாலத்து வீரர்கள் சுட்டுக்கொல்லப் படுகிறார்களே! குருதி கொட்டுகிறார்களே! இரத்தக் காடாகிறதே, பாஞ்சாலம்!" என்கிறாய், "வீரக் கோட்டத்துத் தீரர்காள்! அந்த இரத்தம் வீண்போகவில்லை. பாரதமாதா குளித்திடும் பன்னீராக மாறுகிறது, பாஞ்சால மக்கள் கொட்டும் இரத்தம்" என்று கவிதை பாடுகிறார்.

"செச்சேச்சே! என்ன சிறுமைக் குணம் இது! அந்த அணை எங்கே, இந்தத் தொழிற்சாலை யாருக்கு? எமக்கு என்ன பங்கு? இங்கு எவருக்கு உரிமை? என்றெல்லாம், பேசிப் பேசி, மாநிலம் மாநிலம் என்று கூச்சலிட்டுக் கிடக்கிறீர்களே. சரியா, முறையா? பாரதம் ஒரு நாடு—ஒரே நாடு—உங்கள் நாடு—நம் நாடு—இதிலே எது எங்கே இருந்தால் என்ன?" என்று சீற்றத்துடனே பேசுகிறார், தெற்குச் சீமையினர், உரிமை, பங்கு, உறவு முறை இவை பற்றிப் பேசும்போதெல்லாம்.

அவருடைய மனம், 'பாரத தேசம்' ஒரே நாடு ஒரே அரசு என்ற தத்துவத்தில் இலயித்துவிட்டிருப்பதால், உண்மை நிலைமைகளை அவர் காண மறுக்கிறார் — எவரேனும் சுட்டிக்காட்டினாலோ, சீறுகிறார்.

எனக்குத் தம்பி! அவருடைய போக்குப்பற்றி நினைக்கும்போது, கதையிலே காண்கிறோமே, கடிகாரப் பட்டைக்காக கூந்தலை விற்ற காரிகை, கூந்தல் செருகுக்காகக்கடிகாரத்தை விற்ற கணவன், இவர்கள் நினைவுதான் வந்தது—உள்ளபடி.

'பாரதம்' காண்பதற்காக, வங்கத்தை வதைத்து; பாஞ்சாலத்தை படுகளமாக்கி, திராவிடத்தைத் தேய வைத்து, இவர், 'ஏக இந்தியா' எனும் அணியினைப் பெற்றாலும், செருகு உண்டு, கூந்தல் இல்லை! கைப்பட்டை உண்டு, கடிகாரம் இல்லை, என்பது போன்றநிலையைத்தான் உண்டாக்கிவிடும், என்ற அச்சம் எழுகிறது.

'திராவிடம்' என்ற எழுச்சியும் உணர்ச்சியும் வெட்டி எறியப்பட்டுப், பாரதம் என்ற உணர்ச்சியும் கிடைக்காமல். ஓர் 'சூன்ய' நிலைமை ஏற்படுமோ என்றுகூட அஞ்சுகிறேன்.

அண்ணன்,



"செய்வினை"

[ச. வெ. பாண்டியன்]

அன்று சனிக்கிழமை! மாலை மணி ஐந்திருக்கும். நான் நகரம் சென்று எனது சிற்றூர்—'ஊருணிக்கு'த் திரும்பிவந்துகொண்டிருந்தேன். நான் ஊருக்குள் நுழைந்ததும், மூலை, முடுக்குகளிலெல்லாம் சிறுர் முதல் பெரியவர்கள் வரை குழுமிக், குழுமி நின்று கொண்டிருந்தார்கள்.

அதிலிருந்து, சிற்றூரில் ஏதோ நடந்திருக்கிறது என்று அறிந்து கொண்டேன். பொதுவாகக்கிராமப் பகுதியில் இப்படி மக்கள் கூடிக் கூடி நின்று பேசினால் போதும், உடனே ஏதோ நடந்திருக்கிறது என்று அறிந்துகொள்ளலாம். எனவே, கிராமப்புறத்தானகிய எனக்கு இதை அறிந்துகொள்ள, வெகுநேரம் பிடிக்கவில்லை.

"என்ன நேரிட்டுவிட்டதோ தெரியவில்லையே" என்று என் உள்ளம் படபடத்துக்கொண்டது. விபரம் அறியும் ஆவலுற்றவனாக அருகில் நின்ற பெரியவரிடம் "என்ன ஐயா நடந்துவிட்டது? ஒரு மாதிரி கூடி நின்று பேசிக்கொண்டிருக்கிறார்களே" என்று கேட்டேன். ...

"வாப்பா பாண்டி! விஷயத்தைக் கேட்டியா!"

"என்ன அப்படி!"

நம்ம ஊர் பத்திரகாளிக் கடவுள் ஒரு அம்மாமேலே இறங்கி அருள் எடுத்து ஆடிக்கொண்டிருக்கிறதுல்ல...

ஆமா! அந்த அம்மாதானே நாலைந்து வருடங்களாகப் பத்திரகாளித்தாய் தன் மேலேதான் இறங்கியிருக்கிறாள் என்று மருள் கொண்டு, ஆவணி, தை மாதங்களில் நடைபெறும் கோயில் விழாக்களில் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வந்தது...

பத்திரகாளிச்சுவாமியாக அந்த அம்மா ஆடினதிலிருந்துதானே ஊருக்கு நல்ல மழையும்; வியாதிகள் வராமலும் இருந்துகொண்டிருக்கு! அம்மாவுக்கு நல்ல மதிப்பு, கிராக்கி! கோடித்தெரு குத்தாலலிங்கம் உன்னைப்போலச் சாமியில்லைன்னுதான் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் ஆதிகாலத்து ஆள்! அவனே இப்பொழுது அம்மா சரணம்னு தெண்டனிட்டுக் கிடக்கிறான், இந்த அம்மா காலிலே! அவ்வளவு பேரு! பெருமை!.

அது இருக்கட்டும், என்ன நடந்தது.

கொஞ்சம்கேளு தம்பி! அதனாலே ஊரிலே நாராயணசாமி, பலவேசக்காரச்சாமி, ஆடுறாங்கல்ல; அந்த ஆள்களுக்கெல்லாம் இந்த அம்மா பேர்லே கோபம். ஏன்னா இவர்களுக்கு இப்போது மதிப்பு இல்லை.

ஓகோ! ஆடுகிறவர்களுக்குள்ளே போட்டியா! விஷயம் எங்கே போய் முடிந்தது?

பாவிப் பயல்கள்! இவ பத்திரகாளிச் சாமி ஆடுகிறாளேங்கிற கோவத்திலே, நாராயணசாமி, பலவேசக்காரச்சாமி ஆடுகிற இரண்டு பேரும் சேர்ந்து அந்த அம்மாளுக்கு "செய்வினை" வைத்திருக்கிறாங்கே! எவ்வளவு மோசம்னு பார்த்தியா தம்பி!

"செய்வினையா?"

ஆமாந்தம்பி! 'செய்வினைதான்' வைத்திருக்கிறாங்க! இப்படிச் செய்து அவ புத்தியைக் கெடுத்து, பேயாட்டம் ஆடச்செய்து, கடைசியில் உயிர்ப்பலி வாங்க இப்படிச் செய்திருக்கிறாங்க!

இது உண்மையாகவா? உங்களுக்கு யார் சொன்னது!

குப்பம்மாளும், கன்னியம்மாளும் இன்று புஞ்சைக் காட்டிற்குப் போய் இருக்கிறார்கள். அப்போது பத்திரகாளிச்சாமி ஆடுகிறாளே, அவளுக்குச் சொந்தமான புஞ்சையிலே இப்படிச் செய்வினை வைத்திருப்பதைக் கண்டிருக்கிறார்கள்!

இவங்கதான் வைத்தார்கள் என்று எப்படித் தெரிஞ்சது?

வேறு யாருதான் செய்வா! ஊரே பயந்து 'தஞ்சம்'னு அவ காலிலே கிடக்குது. வேறு யாரு தைரியத்தோட செய்யப்போகிறா!

திடீரென்று பழி சுமத்திவிடக் கூடாது! சரி! 'செய்வினை' எப்படிச் செய்திருக்கிறார்களாம்!

என்னமோ யார் கண்டது! பூமிக்கடியிலே அல்லவா புதைத்து வைத்திருக்கிறார்களாம். வெளியில் நாலுமுக்குச் சமுக்காளக், சட்டம் கட்டின மாதிரி மஞ்சள் நிறத்தில் தெரிகிறதாம். அந்தச் சட்டம் மாதிரித் தெரிகிறதே, அதற்கு உட் பகுதியில் 'சிகப்பு' நிறம் தெரிகிறதாம்...மஞ்சள் தெளித்துக் குங்குமம் பூசியிருக்கிறார்கள். அதுதான் அப்படித் தெரிகிறது!

இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்!

நாம் என்ன செய்யமுடியும்! அவ மகேசுவரியின் அருள் பெற்றவள். அவள் வந்தபின்தான் அதை எடுக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறோம்.

எங்கள் உரையாடல் முடிந்தது. என்னுடன்பேசியவர் ஊர் அம்பலக்காரர். ஊர்க்கொடையை அவர்தான் முன்னின்று நடத்துவார். அவர் நடந்ததைச் சொன்னதிலிருந்து எனக்கு எல்லாம் ஒரே புதிராக இருந்தது.

"செய்வினையாம்! அது ஆளைக் கொல்லுமாம்" என்பதெல்லாம் எனக்கு வியப்பாக இருந்தது. இதனுடைய உண்மையைப் பார்க்க வேண்டும் என்பதற்காக, நானும் ஒன்றும் பேசாமல் இருந்துவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டேன்.

"குப்பம்மாளும், கன்னியம்மாளும் சொல்லத்தானே தெரியுது! அப்படி மினுமினுன்னு மினுங்கல்லசெய்யுதாம்! கண்ணைப் பறிக்குதாம்! வேறேசாமி ஆடுக்கிறாங்களே, அவங்கதான் இதைச் செய்திருக்கணும்!" இப்படிப் பலர் கூடி நின்று பேசிக்கொண்டார்கள்!

"அந்தச் சாமிதான் செய்வினை வைத்தது, இந்தச் சாமிதான் செய்வினைவைத்தது என்று பேசுவதெல்லாம் தப்பு! ஏதோ ஒருவருக்கொருவர் பிடிக்காது என்பதினாலே இப்படியெல்லாம் பேசக் கூடாது" இப்படி ஒரு பக்தர் பேசினார்!

"எங்கிட்ட நேற்று, பத்திரகாளிச் சாமி ஆடுகிறாளே, அந்த அம்மா சொன்னா...அதாவது முந்தாநாள் இரவிலே கனவு கண்டாளாம்...... ஏதோ நாலைந்துபேர் முரட்டர்களாம்! மிடுக்கா மீசைவத்திருந்தார்களாம்......இவளை அலக்காப் பிடித்துத்தூக்கிக்கட்டிலிலே போட்டுக் கட்டினார்களாம்...உடனே இவ எழுந்து யாருடா என்னைக் கட்டுறதுன்னாளாம்......உடனே பயல்கள் ஓடிப்போய்விட்டாங்களாம்."

"அவ சொல்றபடியே நடந்திருக்கிறது. நாலைந்துபேர் என்கிறதிலே

இந்த எதிராளிச் சாமியாடிகளும் மற்றும் சிலரும் சேர்ந்து இந்தச் செய்வினைவைத்ததைத்தான் இப்படிக் கண்டிருக்கிறாள்! அவளிட்டே எதுமுடியும்!" இப்படிப்பலர் பலவாறு நின்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

தூத்துக்குடி நகர் சென்றிருந்த அந்தப் பத்திரகாளிச்சாமி ஆடும் அம்மாள் வர மணி $7\frac{1}{2}$ ஆகிவிட்டது. சிற்றூரிலே இச்செய்தி எங்கும் பரவி எல்லோரும் அவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

அந்த அம்மாள் வந்ததும் வராததுமாக விஷயத்தைச் சொன்னார் அம்பலக்காரர். உடனே அம்மையார் 'அப்படியா' என்று துடித்து எழுந்தார்கள். நான் கனவில் கண்டதுபோலவே ஆகிவிட்டது என்றும் கூறினார்கள். இப்போதே சென்று அதை எடுக்கவேண்டும்! என் சந்நிதானத்தில்வர எவனுக்கு யோக்கியதை உண்டு......என்றார்கள்!

அம்பலக்காரர் ஊரிலிருந்து இரண்டு "பெட்ரோமாக்ஸ்" லைட்களை பொருத்திவரச் செய்தார். ஊர்க்கூட்டமெல்லாம் அம்மையார் வீட்டுமுன்னாலே ஒன்று கூடிவிட்டது.

சூலாயுதமும், திருநீற்றுச் செப்பும் பத்திரகாளிச் சாமியாடும் அம்மாவிடம் கொடுக்கப்பட்டது. சிறிது நேரத்திற்குள் அம்மாளின் மேனி ஆட்டம்கண்டது. "பயப்படாதிர்கள் என் மக்காள்! நான் ஆங்காரம்கொண்ட காளி! அதிகாரம் பெற்றகாளி! உங்களுக்குத் தூசுவராமல் காப்பேனடா......" என்று மருள்கொண்டு ஆடி உத்தரவளித்தார்கள்!

"வாருங்கள்! நடவுங்கள்..." என்று முன்னோக்கி நடந்தார் அம்பலக்காரர். பத்திரகாளிச்சாமி ஆடும் அம்மாள் முன்செல்ல எல்லோரும்பின்சென்றார்கள். இரண்டு ஒளிவிளக்குகள் இரவுபகலாக்கிக் கொண்டுசென்றன! ஊரே திரண்டு போய்க்கொண்டிருந்தது — "செய்வினை" வைத்த இடம் நோக்கி!

ஊருக்கும், 'செய்வினை' வைக்கப்பட்டிருந்த அந்தப் புஞ்சைக்கும் சுமார் 3-பர்லாங் தூரம் இருக்கும். எல்லோரும் அந்த இடத்தை அடைந்தார்கள். ஆனால் அந்த அம்மாவுடைய புஞ்சைக்குள் — அதாவது செய்வினை வைக்கப்பட்டிருந்த புஞ்சைக்குள் மாத்திரம் காலடி எடுத்து வைக்கவில்லை.

காரணம், பயம்தான்! ஏனெனில், இவர்கள் காலில் அது பட்டுவிட்டால் அந்த வினை இவர்களைப் பிடித்துக்கொள்ளுமாம். அதற்காகப் பயந்துகிடந்தார்கள்! எல்லாரும் வலம்வரச் சுற்றிச்சுற்றி வந்தார்களே தவிர, வயலுக்குள் இறங்கித்தேட முடியவில்லை! எல்லோருக்குமே பயம்!

ஆனால், அந்த இரவில் 'செய்வினை' வைத்த இடம்மாத்திரம் தெரியவில்லை. தெரிந்தவர்கள் நாலுபேர் புஞ்சைக்குள் இறங்கித் தேட ஆரம்பித்தார்கள். பத்திரகாளிச் சாமியும் 'உங்களுக்கேதும் வராது காப்பேன்' என்று உறுதியளித்தது. ஆனால் அவர்களோ அதை இலட்சியம் செய்யாது தேடினர்!

கடைசியில் கண்டுபிடித்துவிட்டனர்! அது அவர்கள் சொன்னபடி நாலுபக்கமும் மஞ்சள் நிறத்திலும், ஊடே சிகப்புநிறத்திலும் தெரிந்துகொண்டிருந்தது. ஒருவன் ஒருகையால் அதைப்பிடித்து இழுத்தான்!

கூடியிருந்தவர்கள் என்னமோ, ஏதோ என்று திடுக்கிட்டுக் கிடந்தனர். அவர்கள் பரபரப்பாக இருந்தனர். அவன் அதை அலட்சியமாகத்தூக்கி வெளியே போட்டான்.

அதுவேறு ஒன்றுமில்லை! சாதாரணச் சமுக்கப்பலகை! அதன் சட்டப் பகுதியில் மஞ்சள் நிறத்தால் 'கலர்' கொடுக்கப்பட்டிருந்தது. மத்தியில் சிகப்புநிறம். அதில், "குறுக்குப் பாலம் எதிரில் இருக்கிறது — மெதுவாகப் போகவும்" என்று ஆங்கிலத்தில் எழுப்பட்டிருந்தது! இதுதான் 'செய்வினை'யாகக் காட்சியளித்திருக்கிறது!

நடந்தது என்னவென்றால், அந்தப் புஞ்சைக்கு அருகாமையில் 'எட்டையாபுரம் ரோடு, போகிறது. அதில் 'மூன்றுகண்' பாலம் ஒன்றும் இருக்கிறது. சமீபத்தில் யாரோ ஒரு பெரிய தலைவர் அவ்வழி வருவதாக இருந்தது. அதற்காக அந்தப் பாலததிற்குப் பக்கத்தில் அழகாக அந்தப் போர்டு எழுதபபட்டு ஒரு தடித்த தூணில் மாட்டி வைக்கப்பட்டிருந்திருந்தது.

யாரோ ஒரு உழவர் அதைத் தட்டிப் பார்த்திருக்கிறார். நல்ல தூணைத் தெரியவே அதை அப்படியே பிடுங்கிக்கொண்டு வந்து அதை 'ஏர்க்காலுக்கு'ப் பயன்படுத்திக்கொண்டு, இந்தக் கட்டையைத் தூரத்தில் காட்டுப் பகுதியில் எறிந்துவிட்டிருந்திருக்கிறார்.

இதுதான் மண்ணில் புதைந்து 'செய்வினை'யாகக் காட்சியளித்துவிட்டது.

சாமியாடி அம்மாளின் முகத்தில் அசடு வழிந்தது! பலர் சிரித்தனர்! 'யாரோ விளையாட்டுச் செய்திருக்கிறார்கள்" என்று உறுமினார் அம்பலக்காரர். "இதற்குத்தானா இவ்வளவு கூட்டம்" என்று பேசினார் ஒருவர்!

அப்போது நான் சொன்னேன். "என்னவெல்லாமோ பேசி, ஊரைக் கலக்கி, இல்லாதது; பொல்லாததுகளையெல்லாம் பேசிப், பகையைச் சம்பாதித்து இப்படித் திரண்டு வந்திருப்பதை இந்தப் பத்திரகாளிச் சாமியாடும் அம்மா தடுத்திருக்க வேண்டாமா? புறப்படுவதற்கு முன்னேயே 'ஞானதிருட்சியில்' (!) பார்த்து இது 'செய்வினை' இல்லை, மக்காள், செல்லும் பாலத்து "அறிவிப்புப் பலகை, என்று ஏன் சொல்லியிருக்கக்கூடாது! உண்மையில் அருள் இருந்திருக்குமானால் சொல்லியிருந்திருக்க வேண்டும்!......இதுதான் மூடநம்பிக்கை என்பது" என்றேன்.

அப்பெரிய கூட்டத்தில் யாரும் பதில் பேசவில்லை. வேறு இடமாக இருந்திருந்தால் "போப்பா... நீதான் சாமியில்லையென்பவனாச்சே" என்று சொல்லியிருப்பார்கள். ○

பொருளாளர்

அறிவிப்பு

நான் கலந்துகொள்ளும் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் தேர்தல் நிதியாகக் குறைந்தது **250** ரூபாயும், அதற்கு மேலும் தருவதாகவாக்களித்துக் கடிதம் எழுதியுள்ள கிளைக்கழகங்கள், அந்தந்த வட்டச் செயலாளர்கள், அல்லது அந்தந்த மாவட்ட, மாநிலச் செயலாளர்களிடம் அந்தப் பொதுக்கூட்டத்திற்கான அனுமதிபெற்று, உடன் எனக்கு, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைத்தால் ஜனவரித் திங்களில் தேதி குறித்தனுப்ப வசதியாக இருக்கும்.

கிளைக் கழக முகவரியுடன், எந்த வட்டம், மாவட்டம், அல்லது மாநிலம் என்ற விவரமும் தேவை. ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அன்பன்,

மு. கருணாநிதி,

தலைமைக் கழகப் பொருளாளர்,

அறிவகம்—சென்னை-13.

சிறிய பிரச்சினை அல்ல

19 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (25-12-60) தனிப் பிரதி 16-காசு | இதழ் 24

இலங்கையில் வதியும் எண்ணற்ற இந்நாட்டு மக்கள்பற்றிய பிரச்சினையில், இப்போது இங்குவந்திருக்கும் இலங்கைப் பிரதமர் ஈடுபட்டு, ஏதாவது பரிகாரம் காண முயல்வாரா என்று கேட்டதற்குத் திருமதி சிரிமாவோ அவர்கள், இப்போது அதுகுறித்துப் பேசும் நோக்கத்தோடு தாம் வரவில்லை என்றும், ஆனால், கூடிய விரைவில், அதாவது, இன்னும் ஒரு ஆண்டு தள்ளியாவது அது குறித்துப் பேசலாமென்று கருதுவதாகவும் கூறியுள்ளார்.

நீண்டகாலமாக இருந்துவரும் ஒரு முக்கியமானதும் — உடனடியாகப் பரிகாரம் காண வேண்டியதுமான இந்தப் பிரச்சினையில் இலங்கை முதல்வர் இந்த அளவுக்கு அலட்சியப்போக்குடன் பதில் கூறுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

இதைவிட வேறு பல முக்கியமான—பெரிய பிரச்சினைகள் இருப்பதால், இதைக் கவனிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ள பிரதமருக்கு, அங்குள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியவை — ஒழுங்குபடுத்தப்படவேண்டியவை—பல இருக்கலாம். அதை நாம் மறுக்கவில்லை.

ஆனால், இங்கிருந்து சென்று இலங்கையில் அவதியுறும் ஆயிரமாயிரம் மக்கள்பற்றிய பிரச்சினை தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதில் நமக்கிருக்கும் அக்கறையின் அளவு திருமதி சிரிமாவோ அவர்களுக்கு இல்லையென்றாலும், அவர்கள் இதனை இவ்வளவு வெளிப்படையாகக் கூறியிருக்கக் கூடாதென்பதே நமது கருத்தாகும்.

சிங்கள மொழியை அந்நாட்டின் ஆட்சி மொழியாக்குவது, பள்ளிக்கூடங்களைச் சர்க்கார் வசமாக்குவது, காமன்வெல்த் மாநாட்டுக்குப் போவது, சாங்கோவிலுள்ள இலங்கைத் துருப்புகள்பற்றி என்ன முடிவுசெய்வது என்பன போன்ற பிரச்சினைகள் பெருமளவுக்கு இலங்கை முதல்வரைத் தொல்லைப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

என்றபோதிலும், கூடிய விரைவில், இலங்கைவாழ் இந்நாட்டு மக்கள்பற்றிய பிரச்சினைக்கும் ஒரு முடிவுகாணவேண்டும்—ஆனால், அது இப்போதைக்கு இல்லை — இன்னும் ஒரு ஆண்டு கழித்துப் பார்க்கலாமென்று கூறி, வாய்ப்பு ஏற்பட்டால் பண்டிதநேரு அவர்களிடமும் இதுபற்றிக் குறிப்பிடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால், பண்டித நேரு அவர்கள், திருமதி சிரிமாவோ அவர்களின் குறிப்பை, அதாவது இலங்கையிலுள்ள இந்நாட்டவர் பற்றிய பேச்சினைப் பேசும்போது, அவரும் அதனை ஒரு குறிப்பாகக்கொண்டு, "சரி, சரி, இதுவா இப்போது முக்கியம்? தாங்கள் கூறுவதுபோல் பெரிய பெரிய பிரச்சினைகளை முதலில் கவனியுங்கள்—பிறகு இதுபற்றி ஆர அமரப் பேசிக்கொள்வோம்" என்று தட்டிக் கழிப்பாரா, அல்லது, "நீங்கள் இதனை ஒரு சிறு பிரச்சினையாகக் கருதிவிடக்கூடாது. இங்கு—எனது நாட்டில்—இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. எனவே, உங்களுடைய பெரிய பிரச்சினைகளில் இதனையும் ஒன்றாகச் சேர்த்து, விரைவில் இதற்கு ஒரு முடிவு காணுவதுதான் நல்லது" என்றுகூறி, யாதாயினும் ஒரு நல்ல பரிகாரம் காண முயல்வாரா என்பது தெரியவில்லை.

வந்திருக்கும் விருந்தினரிடம் எதனையும் வற்புறுத்திப் பெறும்போக்கு உண்மையிலேயே பண்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும் என்பதனை நாம் அறிவோம்—என்ற போதிலும், அவசியமான அரசியல் விவகாரங்களை ஒரு நாட்டு முதல்வரோடு இன்னொரு நாட்டு முதல்வர் கலந்து பேசும் வாய்ப்பு ஏற்படும்போது, அவரவரும் தம் நாட்டுக் குறைகளை எடுத்துக்கூறி, அவை தீர்க்கப்படுவதன் அவசியத்தை வற்புறுத்துவது ஒன்றும் நாகரிகமற்ற முறையாகாது.

எனவே, பண்டித நேரு அவர்கள், திருமதி சிரிமாவோ அவர்களுடன் உரையாடும்போது, இதுபற்றி அலட்சியப் போக்குடன் நடந்துகொள்ளமாட்டார் என்று நம்புகிறோம். இது இலங்கை முதல்வர் கருதுவதுபோல் ஒரு சிறிய பிரச்சினை அல்ல என்பதனையும் இங்கு குறிப்பிடுகிறோம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

பிறகு கல்யாண ஏற்பாடு நடக்கட்டும். அவசரப்பட்டு, எதையாவது செய்து தொலைத்துவிட்டு, வம்பு வல்லடியிலே, சிக்கிக்கொள்ளப் போறிங்க...''

''பட்டு! கேட்டுக்கொள்! நான், சொன்னா உனக்குக் கோபம் கோபமா வருது!''

''பட்டு! பொன்னியோட தம்பி' தங்கமானவன். உனக்குப் பொருத்தமானவன். ஜாதி வேறேதான்—ஆனா இந்தக் காலத்திலே, அதை முக்கியமானதாகக் கொள்ளக்கூடாது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனா உங்க பெரியப்பா இருக்காரே, உனக்கே தெரியும்; சுரீல்னு கோபம் வந்துவிடும்...''

''அவருக்குக்கூட ஜாதி, பேதம், இதெல்லாம் பிடிக்காதாமே. பட்டு, சொல்கிறா''

''அவருக்கு மட்டுந்தானா! ஏண்டி பொன்னி! உனக்குத் தெரியாததையா நான் சொல்லப்போறேன். இந்தக் காலத்திலே, ஜாதிபேதம் இருக்கத்தான் வேண்டும்னு ஒருத்தர்கூடப் பேசறது இல்லை—பேசமாட்டார்! ஆனா, காரியம்னு வருகிறபோது, எத்தனைபேர் கர்ணம் அடிக்கிறா, கட்சிமாறிப்போறா, தெரியுமேல்லோ...''

''பட்டுவுக்குச் சொல்லுங்க. எனக்குத் தெரியும், பலருடைய போக்கு, அப்படித்தான் என்பது''

''பெரியப்பாவிடம் போய்க் கேட்டா, ஒப்புக்கொள்ளவா போகிறார். முகத்தை 'உம்'னு வைத்துக்கொள்வார். உன் இஷ்டம்! என்னைக் கேட்பானேன்! நான் யார்? நீ யார்? உன்னுடைய தாயும் தகப்பனும் பாக்யசாலிகள்! உன்னுடைய பாபகாரியத்தைப் பார்க்காமல், பகவானிடம் சென்றுவிட்டார்கள்! என்றெல்லாம் பேசுவார்...... கதறுவார்...!''

''கன்னத்தில் அறைவார்! கண்டபடி ஏசுவார்! கால்காசு, உனக்குக் கிடையாது என்பார்! காலடிபடக்கூடாது என் வீட்டில், என்பார்! ஐயோ, அந்த மனுஷன் பொல்லாதவன்! பார்க்கிறேன், உன்னைக் கட்டிக்கொள்ள வருகிற ஆசாமியை! என்று மிரட்டுவார்!''

''இதென்ன, விபரீதம் ஏதாவது நடந்துவிடப்போகிறது...''

''முதலிலேயே, போலீசுக்கு நிலைமையைத் தெரிவித்துப் பாதுகாப்புபெற்றுக்கொள்ளமுடியும்... சட்டப்படி...''

''சட்டம் இருக்கட்டும்டி, பட்டு! சமயாசந்தர்ப்பம் தெரியாமல், வக்கீல் பேச்சே பேசிக்கொண்டிருக்காதே. பொன்னி! இப்படிச் செய்தால், என்ன? நாம, ஒரு நாலுபேர், போறது அவரிடம் விளக்கமாகப் பேச...''

''அந்த நாலுபேரிலே, நான் ஒருத்தியாக இருக்கமுடியாதே! தம்பிக்காகப் பேசுகிறாள் என்றுதானே சொல்லுவார்கள்''

''அதுவும் உண்மைதான். ஒரு காரியம் செய்யட்டுமா? எங்களவர், அடிக்கடி சொல்லுவார், பட்டுவோட பெரியப்பாவோட விஷயமா ...விருந்துன்னா, அவருக்கு உயிராம்! ஒருநாளைக்கு, எங்க வீட்டுக்கு அவரை விருந்துக்கு வரச்சொல்லி, அவருக்குச் சந்தோஷம் ஏற்படும்படியான விருந்தாக நடத்தி, பிறகு மெள்ளக் கலியாணப்பேச்சை ஆரம்பிக்கட்டுமா?''

''இதற்கு, உங்களவர் ஒப்புக்கொள்வாரோ?''

''உங்களுக்கு ஏண்டி அந்தக் கவலை. என்னோட விஷயம் அது. விருந்துவைத்து, பிறகு பேசினா காரியம் பலிக்குமா? அதைச் சொல்லுங்க...''

''எங்களுக்கு என்ன தெரியும்? அப்படிப்பட்ட அனுபவம் கிடையாதே!''

''பொன்னி! உன் கேலிப்பேச்சுக்கு என்னாலே சரியான சவுக்கடி கொடுக்கமுடியும். போகட்டும், நல்லகாரியம் செய்ய ஏற்பாடு நடக்கும்போது, இதைக் கவனிக்க வேண்டாம்னு, விட்டுவைக்கிறேன். அது கிடக்கட்டும், ஏண்டிம்மா, டாக்டர்! என்னென்னமோ, அதிசயம் நடப்பதைச் சொன்னயே, முன்கோபக்காரரைச் சாந்தப்படுத்த, ஏதாவது மருந்து இருக்குதா சொல்லேன். பட்டுவோட பெரியப்பாவுக்குக் கொடுப்போம்''

''பலே! பலே! விருந்துன்னு ஆரம்பிச்சி மருந்துன்னு வந்து நிற்கறிங்க. வேடிக்கைக்குச் சொல்லவில்லே! முன்கோபம், திடீர் திடீர்னு சோகம், காரணமில்லாத களிப்பு இதெல்லாம்கூட நரம்புகளுடைய தன்மையைப் பொறுத்துத்தான் இருக்கிறது! நரம்புகளின் அமைப்பும், தன்மையும் இருப்பதைப் பொறுத்துத்தான், மனிதர்களுடைய சுபாவம் நடவடிக்கை எல்லாமே இருப்பதாக இப்போது ஆராய்ச்சியாளர்கள், சொல்கிறார்கள்''

''நரம்புகளின் தன்மையை மாற்றிவிட்டால், சுபாவமேகூட மாறிவிடும் என்கிறாயா மணி!''

''ஆமாம்! இன்னும் சில ஆண்டுகளிலே, இந்தத் துறையிலே பிரமாதமான வெற்றிகள் கிடைக்கும் என்று கூறுகிறார்கள்''

''அப்படியானா, பட்டுவோட பெரியப்பாவின் நரம்பிலே இருக்கிற கோளாறைச் சரிப்படுத்திவிட்டால் தொல்லையே இல்லைன்னு சொல்லு.''

''அப்படியும் செய்யலாம், அல்லது, பட்டுவோட நரம்புக் கோளாறை நீக்கி, அவளுடைய மனதிலே மூண்டுவிட்ட காதலையேகூட இருக்குமிடம் தெரியாமல் செய்துவிடலாம்.''

''இப்படிப் பேசிக்கொண்டிருப்பதானால், நான், போகிறேன், வெளியே......''

''கோபத்தைப் பாரேன் கோபத்தை. நாங்கள் அப்படித்தான் பேசுவோம், நீ யார், தடுக்க. நீ எங்கே போனாலும் விடமாட்டோம். அங்கேயும் வந்து, இதையே பேசுவோம். என்ன செய்யமுடியும், உன்னாலே......''

''என்ன செய்யமுடியும் என்றா கேட்கிறீர்கள். என்னிடமா கேட்கிறீர்கள்?''

''ஆமாமடி, வக்கீலம்மா, ஆமாம்! என்ன செய்துவிடுவாய்...''

''வேண்டாம்...வம்புக்கு வராதீர்கள்...''

''இந்த மிரட்டலுக்கு நாங்கள் பயப்படமாட்டோம்...''

''இப்போது இப்படித்தான் சொல்வீர்கள். சம்மன் வந்தால் தெரியும் உங்களுக்கு...''

''சம்மனா......யாருக்கு......எங்களுக்கா...''

''என்னை, வேண்டுமென்றே கேலி செய்து செய்து, என் மனதுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தினீர்கள், அந்த அதிர்ச்சியினால், நோய் ஏற்பட்டது, மூன்று மாதம் என் வக்கீல் தொழிலை நடத்தமுடியவில்லை, அதனால் மூவாயிர ரூபாய்,

நஷ்டம் ஏற்பட்டது, என்று சொல்லி வழக்கே போட்டுவிடுவேன். சட்டம், என்ன தெரியும் உங்களுக்கு...”

“போடி போ! நீயும் உன்னுடைய சட்டமும்...”

“அப்படி என்றால், நான் சொன்னது வேடிக்கைக்கு என்று நினைக்கிறீர்களா? சட்டப்படி, வழக்குப் போடலாம்......மன அமைதியைக் கெடுத்தால், அதிர்ச்சி ஏற்படும் படி செய்தால், பயமூட்டினால்! இதற்கெல்லாம் வழக்குப்போட, சட்டம் இடம் கொடுக்கிறது; தெரியுமோ...”

“ஏதேது! இவளுக்குக் கொஞ்ச நாளிலே இறுக்கு முற்றி, பொன்னியோட தம்பி மீதே வழக்குப் போட்டுவிடுவா போலிருக்குதே. இவளுடைய மன அமைதியைக் கெடுத்ததாகச் சொல்லி, நம் பேரிலே வழக்குப் போடலாம் என்கிறவ, தன் மனதையே களவாடிக் கொண்டான் என்று, வழக்குப் போட்டாலும் போட்டுவிடுவா டிம்மா...”

“வெவ் வெவ் வே வே! உங்களுடைய குத்தல் பேச்சுக்கு, பொருளுமில்லே, பொருத்தமுமில்லே...”

“போச்சு! போச்சிடி பட்டு! உன் வழக்கு! இவர்கள், கேலி பேசி என் மனதுக்கு அதிர்ச்சியை உண்டாக்கினார்கள் என்று வழக்கு போட்டுவிட்டு, இவர்கள் பேச்சுக்குப் பொருளும் இல்லை, பொருத்தமும் இல்லை என்று நீயே சொல்லிவிட்டா, உன் கட்சி தோற்றுவிடுமே...”

“பொன்னி! சட்டம் பேசுவா, பட்டு. ஆனா, இப்ப அவ இருக்கிற நிலையிலே, வாதியார், பிரதிவாதியார், என்பதுகூட அவளாலே விளங்கிக்கொள்ள முடியாது!!”

“இருங்க, இருங்க! வரட்டும், உங்க வீட்டுக்காரர், அவரிடமே சொல்லி...”

“வா! அதோ, வாசலிலே வண்டி வந்து நின்ன சத்தம் கேட்கிறது, அவரிடம்போய்ச் சொல்லு...”

“ஐயயோ! விடுங்க கையை...... விடுங்கண்ணா... பொன்னி! மணி! இருங்க, இதோ நானும் வர்ரேன்... விடுங்க, கையை! விடவில்லையானா, மயக்கம் வந்துவிடும், ஆமாம்...”

“வேண்டாண்டிம்மா, வேண்டாம். போயிட்டு வா! பிறகு பேசிக்கொள்ளலாம். டாக்டர்! இவளோட வாய் அடங்கறமாதிரியா, ஒரு நாலு ஊசி போடு, இழுத்துக்கொண்டு, போய்...”

★

“திராவிட நாடு”

பொங்கல் மலர்

கண்ணைக் கவரும்
வண்ண முகப்பும்
கருத்தை அள்ளும்
எண்ணக் குவியலும்
காவியமும் ஓவியமும்
பொலிவுற்றுத் திகழும்
இவ்வாண்டுப் பொங்கல் மலரின்
விலை ரூபா 1-50

பதிவு எண். எம். 4642   தொலைபேசி எண்.... { அலுவலகம் 15 / இல்லம் ...118 }
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

பாரகன், ஸ்ரீகிருஷ்ணா, உமா, லிபர்ட்டியிலும் (கோடம்பாக்கம்)

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்